**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 , திருப்பத்தூர்,**
**திருப்பத்தூர் மாவட்டம்**

**முன்னிலை :** **திரு.S.கோவேந்தன், B.A., LL.B., (Hons).,**
நீதித்துறை நடுவர் எண்.3 (மு.கூ.பொ),
திருப்பத்தூர்.

2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 01 –ஆம் நாள் புதன்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 247/2025**
**F.NO.2971/2025**
**CNR.NO.TNTU02-002971-2025**

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
நாட்றம்பள்ளி காவல் நிலையம்,
திருப்பத்தூர் மாவட்டம்.
குற்ற எண். 897/2020 **......புகார்தாரர்**

**//எதிரிடை//**

விஜயகுமார் (வயது. 45) த/பெ. ராஜா **.....குற்றஞ்சாட்டப்பட்டவர்**

**(குற்றம்சாட்டப்பட்டவர் வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்கொண்டார்)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சி.சி.எண். 247/2025 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | நாட்றம்பள்ளி காவல் நிலையம், குற்ற எண்.897/2020 |
| **குற்றம் சாட்டப்பட்டவரின் விவரம்** | | |
| 3 | குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர்கள் | விஜயகுமார் (வயது. 45) த/பெ. ராஜா |
| 4 | தொழில் | – |
| 5 | முகவரி | தொப்பூர் வட்டம்,அன்னசாகரம் கிராமம், நாட்றம்பள்ளி தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம். |
| **நாள்** | | |
| 6 | குற்ற நிகழ்வு | 14.05.2020 |
| 7 | புகார் | 17.05.2020 |
| 8 | கைது செய்யப்பட்ட நாள் | –– |



KOVENDHAN S
Judicial Magistrate No.III (FAC), Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | எதிரி பிணையில் வந்த நாள் | -- | | |
| 10 | வழக்கு துவங்கிய நாள் | 12.06.2025 | | |
| 11 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | 01.07.2026 | | |
| 12 | தீர்ப்பு | விடுதலை | | |
| 13 | தாமதத்திற்குரிய காரணம் | -- | | |
| **வழக்கின் நிலை** | | | | |
| 14 | பிணைக்காலம் | -- | | |
| 15 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 21.05.2025 | | |
| 16 | BNSS பிரிவு 263 (முதல் கேள்வி) | 27.06.2025 | | |
| 17 | பல்வகை மனுவின் மீது இந்நீதிமன்றத்தின் உத்திரவு | - | | |
| 18 | முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை | **அரசு தரப்பு சாட்சி** | **முதல் விசாரணை** | **குறுக்கு விசாரணை** |
| | | அ.சா. 1 | 02.06.2026 | -- |
| | | அ.சா. 2 | 02.06.2026 | -- |
| | | அ.சா. 3 | 02.06.2026 | -- |
| | | அ.சா. 4 | 24.06.2026 | 24.06.2026 |
| 19 | BNSS பிரிவு 351(1)(b) (வினாவல்) | 01.07.2026 | | |
| 20 | தலைமறைவு எதிரிகளின் விவரங்கள் / அவரது ஆஜர்/ஒப்படைப்பு | இல்லை | | |
| 21 | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கபட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும் | இல்லை | | |

இவ்வழக்கு கடந்த 21.05.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 01.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசுக்காக கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்களும், எதிரிகளுக்கு கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. அறிவுச்சுடர், M.A.,B.L., அவர்களும், ஆஜராகியிருக்க, ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலினை செய்ததின் பேரில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,



KOVENDHAN S

Judicial Magistrate No.III (FAC), Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

## தீர்ப்புரை

## I. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:-

**1.** இவ்வழக்கில் புகார் சாட்சி மீனா குடும்பத்தாருக்கும், எதிரியின் குடும்பத்தாருக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்த நிலையில், கடந்த 14.05.2020 அன்று காலை சுமார் 06.55 மணியளவில், புகார் சாட்சி மீனாவை, அசிங்கமாக திட்டி, கட்டையால் அவரது இடது கை மீது அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாகவும், மேலும் புகார் சாட்சி மீனாவை பார்த்து, உன்னை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று கூறி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(i) ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக்கொண்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி ஆஜரானவுடன் குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரியிடம் வினவியபோது, எதிரி அதை மறுத்ததால் அரசு தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

**3.** அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.4** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்களும், **அ.சா.பொ-1ம்** வழக்கிற்கு ஆதாரங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4.** அரசு தரப்பு சாட்சிகள் முடிவுற்ற பிறகு, சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(b)-ன் கீழ் வினவியபோது எதிரி "பொய் சாட்சியம்" என்றும், அவர் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறினர்.

## II. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:

**5.** அ.சா.1 மீனா, கடந்த 14.05.2020 அன்று 13.00 மணிக்கு நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் அடிப்படையில் நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில்



KOVENDHAN S
Judicial Magistrate No.III (FAC), Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

பணியாற்றிய காவல் உதவி ஆய்வாளர் திரு. கமலக்கண்ணன், அவர்கள் பின்னர், புகார் வாக்குமூலத்தை பரிசீலனை செய்து, அந்த புகாருக்கு சி.எஸ்.ஆர் எண் 197/2020 வழங்கி, அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, தனது புலன்விசாரணையை முடித்து எதிரிக்கெதிராக இறுதியறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார்.

**III. <u>இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவெனில், அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) –இன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு உள்ளதா? இல்லையா ? என்பதே ஆகும்.</u>**

**IV. <u>அரசு தரப்பு சாட்சிகளின் நீதிமன்ற விசாரணையின் சுருக்கம் :</u>**

**6.** இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட அ.சா.1. மீனா, தனது நீதிமன்ற விசாரணையில், "நான் எனது வீட்டில் இருந்தபோது யாரோ ஒருவர் வந்து என்னை தாக்கிவிட்டு சென்று விட்டார் என்றும், எனக்கும் எதிரிக்கும் பிரச்சனை இருந்து வந்ததால் எதிரி என்னை தாக்கியிருக்க கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் எதிரி மீது புகார் அளித்தேன்" என்று சாட்சியம் அளித்ததால், மேற்படி சாட்சியை பிறழ் சாட்சிகளாகப் பாவித்து குறுக்கு விசாரணை செய்தபோதும், அரசு தரப்பிற்கு சாதகமாக எந்த பதிலையும் அளிக்கவில்லை.

**7.** இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 திரு. சிவக்குமார் மற்றும் பார்வை மகசர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 திரு. ராமன் ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக எந்த பதிலையும் அளிக்காததால் அது எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நிரூபிக்கும் விதமாக இல்லை.

**8.** இவ்வழக்கில் அ.சா.4 சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ராமமூர்த்தி,



KOVENDHAN S
Judicial Magistrate No.III (FAC), Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

9. இவ்வழக்கில் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 திரு. ராமமூர்த்தி அவர்கள், புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு. கமலக்கண்ணன், இவ்வழக்கில் அ.சா.1 அளித்த அ.சா.ஆ.2 புகாரின் அடிப்படையில், அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் ராமன் மற்றும் சசிக்குமார் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.4 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்து, சம்பவயிடத்தில் இருந்து வழக்கு சொத்தான சா.பொ.1 மரக்கொம்பு –1 ஐ, அ.சா.ஆ 6 கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி, மேற்படி வழக்கு சொத்தை படிவம் –91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மேலும், வழக்கு சம்பவத்தில் காயமடைந்த அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. சிவக்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என்று வழங்கிய அ.சா.ஆ.7 காயச்சான்றிதழ் பெற்று, அவரது புலன் விசாரணையை முடித்து, இவ்வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தது வரை ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

10. அ.சா.1 தனது புகாரில், தன் கணவருடைய அண்ணன் விஜயகுமார் தன்னையும், தனது கணவரையும் அசிங்கமாக திட்டி, கட்டையால் தாக்கி, கொலை மிரட்டல் விடுத்ததாக கூறியுள்ளபோதிலும், தனது நீதிமன்ற விசாரணையில் மேற்கண்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி எதிரிக்கு எதிராக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

11. இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள், அரசு தரப்பிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை சாட்சியாக விசாரிக்கத் தவறியுள்ளதாலும், அ.சா.4 சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாக கருத



KOVENDHAN S
Judicial Magistrate No.III (FAC), Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**V. <u>இறுதியாக,</u>**

**12.** அரசு தரப்பு தரப்பில், எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 294(b), 324,506(ii)–ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று முடிவு செய்து, எதிரியை B.N.S.S பிரிவு 271(1)–இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**13.** இவ்வழக்கில் **C.P.No. 80/2026 நாள். 24.06.2026** –இல் உள்ள வழக்குச்சொத்தான **1. மரக்கொம்பு ஒன்றை** (சுமார் 3 அடி நீளமும், 4 செ.மீ சுற்றளவும் கொண்டது) மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

**14.** எதிரி எழுதிக்கொடுத்த பிணையம் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின்னர் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

**15.** இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்குச் சொல்லச்சொல்ல, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, திருத்தங்களுக்குப் பிறகு 2026–ஆம் வருடம் ஜூலை மாதம் 01 –ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

KOVENDHAN S

Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

**நீதித்துறை நடுவர் எண்.III (மு.கூ.பொ),**
**திருப்பத்தூர்.**

**<u>இணைப்பு :</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>** :

| அரசு தரப்பு சாட்சிகள் | சாட்சியின் பெயர் | சாட்சியின் வகை |
|---|---|---|
| **அ.சா.1** | திருமதி. மீனா க/பெ. சிவக்குமார் | புகார்தாரர் |
| **அ.சா.2** | திரு. சிவக்குமார் த/பெ. ராஜா | கண்ணுற்ற சாட்சி |
| **அ.சா.3** | திரு.ராமன் த/பெ. ராஜகோபால் | பார்வை மகசர் சாட்சி |
| **அ.சா.4** | திரு. ராமமூர்த்தி த/பெ. சின்னராஜ் | புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| சான்றாவண எண். | சான்றாவணத்தின் வகை | சான்றளித்தவர்/ மெய்ப்பித்தவர் |
|---|---|---|
| **அ.சா.ஆ.1** | புகாரில் உள்ள கையொப்பம் | அ.சா.1 |
| **அ.சா.ஆ.2** | புகார் | அ.சா.4 |
| **அ.சா.ஆ.3** | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| **அ.சா.ஆ.4** | பார்வை மகசர் | அ.சா.4 |
| **அ.சா.ஆ.5** | மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| **அ.சா.ஆ.6** | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.4 |
| **அ.சா.ஆ.7** | காயச்சான்றிதழ் | அ.சா.4 |

**<u>அரசு தரப்பு பொருள் – C.P. 80/2026</u>**

1. மரக்கொம்பு – 1

**<u>எதிரி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை**

**<u>எதிரி தரப்பு சான்று பொருள் –</u> இல்லை**

KOVENDHAN S

Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

**நீதித்துறை நடுவர் எண்.III (மு.கூ.பொ),**
**திருப்பத்தூர்.**

**<u>பின்குறிப்பு</u>**

i. எந்த சாட்சியும் 3 கேட்புரைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
ii. விசாரணை சமயம் எதிரி பிணையில் இருந்தார்.
iii. வழக்கு முடிவு குறித்து சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
iv. வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு வழக்குச் சொத்துக்கள் பதிவேட்டில் பதிய உத்தரவிடப்பட்டது.

KOVENDHAN S

Judicial Magistrate No.III (FAC),
Digitally signed by KOVENDHAN S
Location: Tirupathur, Tirupathur District.

**நீதித்துறை நடுவர் எண்.III (மு.கூ.பொ),**
**திருப்பத்தூர்.**